தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் – மன்ற உறுப்பினர் குழுவை மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1.) துறை

அரசு ஆணை (நிலை) எண்.118 நாள்: 11.7.2008.

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண். 117, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 14.9.2006.
2. அரசு ஆணை (நிலை) எண். 10, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 6.2.2007.

**ஆணை:**

படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டத்தைக் கண்காணிக்கவும் மற்றும் அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் ஒன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைத்து ஆணையிடப்பட்டது. அக்குழுவில் 10 அலுவல் சார் உறுப்பினர்களும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

2. படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் அலுவல் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை மாற்றி அமைத்து அரசு ஆணையிட்டது.

3. தேசிய ஊரக வேலை உறுதி திட்டமானது 1.4.2008 முதல் தமிழ்நாட்டில் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தினை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) ஏற்கனவே உள்ள அலுவல் சார் உறுப்பினர்களுடன் நெடுஞ்சாலைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களை அலுவல் சார் உறுப்பினராக நியமனம் செய்து ஆணையிடுகிறது.

(ஆ) அலுவல் சாரா உறுப்பினர்களில் தொழிலாளர் மற்றும் நலிவுற்றோருக்கான அமைப்புகள் சார்பாக பின்வரும் இரு நிறுவனங்களின் நிர்வாகிகள் உறுப்பினர்களாகத் தொடர்ந்து பணியாற்றவும் அரசு ஆணையிடுகிறது.

1. செயல் இயக்குநர், தான் பவுண்டேசன் (DHAN Foundation), மதுரை.
2. செயலாளர், காந்திகிராம் டிரஸ்ட், அம்பாத்துரை, திண்டுக்கல் மாவட்டம்.

(இ) மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் சாரா உறுப்பினர்களுக்குப் பதிலாக பின்வருவோரை அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமித்து அரசு ஆணையிடுகிறது.

<u>நாடாளுமன்ற உறுப்பினர்கள்</u>

1. திரு. பொ. மோகன் – மதுரை
2. திரு. ஈ.ஜி. சுகவனம் – கிருஷ்ணகிரி

**<u>சட்டமன்ற உறுப்பினர்கள்</u>**

1. திருமதி டாக்டர் கே. காயத்ரிதேவி – மதுராந்தகம்
2. திரு. எஸ். குணசேகரன் – சிவகங்கை

**மாவட்ட ஊராட்சி தலைவர்**

திருமதி அஜிதா மனோ தங்கராஜ் – கன்னியாகுமரி

**ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள்**

1. திருமதி பா.சாந்தி – கடலூர் ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம்
2. திருமதி பி. சரஸ்வதி – க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்

**கிராம ஊராட்சி தலைவர்கள்**

1. திரு. பி.செல்வகணேசன் – செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்
2. திரு. ஆர். நாராயணன் – குட்டப்பட்டி ஊராட்சி, சேலம் மாவட்டம்
3. திரு என். தேவராஜன் – சின்னியம்பாளையம் ஊராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்
4. திரு. சு. திலகராஜ் – டி. கரிசல்குளம் ஊராட்சி, விருதுநகர் மாவட்டம்
5. திரு. இரா. இராஜன் – மாத்தூர் ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம்
6. திரு. ஆர். பாலமணி – திருப்பராய்த்துறை ஊராட்சி, திருச்சிராப்பள்ளி

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அசோக் வர்தன் ஷெட்டி**,
அரசு முதன்மைச் செயலாளர்.